පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - 2015 අගෝස්තු
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2015 ஆகஸ்ட்
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) – AUGUST 2015
மெய்யியல்

## மேற்கத்தேய மெய்யியல் - (PHG IV)

இவ்வினாத்தாளில் எல்லாமாக பத்து (10) வினாக்கள் காணப்படுகின்றன. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
நேரம் - மூன்று மணித்தியாலம்.

---

01. தொன்மை மெய்யியலின் இயல்பை எவ்வாறு விளக்குவீர். அத்துடன் மைலீஸிய மெய்யியலாளர்கள் ஏன் முதலாவது மெய்யியலாளராகக் கருதப்படுகிறார்கள்?.

02. **ஒன்றில்**

‘ சோபிஸ்டுகள் நடைமுறை மனிதர்கள் அத்தோடு மனித இயல்பை பற்றிய மிகக் கவனமான எண்ணத்திற்கு வழிவகுத்தவர்கள்’ என்று கூறுவது சரியா? ஆராய்க.

**அல்லது**

மெய்யியல் ரீதியான சிந்தனை பற்றிய சோக்ரடீஸின் நோக்கினை விளக்கி சோக்ரடீஸ் தமது மெய்யியலில் பகுப்பாய்வில் பயன்படுத்திய முறையினைச் சுருக்கமாகப் பரிசீலிக்குக.

03. பிளேட்டோவின் வடிவக்கோட்பாட்டை விமர்சனரீதியாகப் பரிசீலனை செய்க.

04. தோமஸ் அக்வைனஸ் எவ்வாறு கடவுள் இருப்பினை நிருபிக்கின்றார்?.

05. பகுத்தறிவை விட சமய நம்பிக்கைக்கே மத்திய கால மெய்யியலாளர்கள் முக்கியத்துவம் தந்தனர் என்று கூறுவது சரியா?

06. மத்திய காலத்தில் அரிஸ்டோட்டில் மீளக்கண்டு பிடிக்கப்பட்டதை நீர் எவ்வாறு விளக்குவீர்?

07. ‘ நான் சிந்திக்கின்றேன. ஆகவே நான் இருக்கின்றேன.’ என்பது பற்றி டேக்கார்ட் கொண்டிருந்த கருத்து என்ன என்பதை விளக்கி கார்ட்டீஸிய ஐயமுறையை சுருக்கமாக விளக்குக.

08. ‘அனுபவவாதம்’ என்ற பதத்தைச் சுருக்கமாக விளக்கி ஜோன் லொக்கின் **அல்லது** ஹியூமின் அனுபவவாதத்திற்கான பங்களிப்பினை ஆராய்க.

09. பிந்திய விட்கன்ஸ்டைனின் மெய்யியல் பகுப்பாய்விற்கான பிரதான எண்ணக்கருக்களைக் கூறிச் சுருக்கமாகப் பரிசீலிக்குக அல்லது இமானுவல் காண்டின் விமர்சனப் பகுப்பாய்வு மெய்யியலைச் சுருக்கமாக ஆராய்க.

10. 
    i. வரலாற்றுப் பொருள்வாதம்
    ii. உடன் பிறந்த எண்ணங்கள்
    iii. இருப்பியல்வாதம் அல்லது தர்க்க புலனெறிவாதம்
    iv. மெய்யியலும் இறையியலும்
    v. மொழி விளையாட்டு

-----------